## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்

# மயிலாடுதுறை மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு ஆய்வுக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாகை. செப்.24-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள கலையரங்கத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பணிகள் சிறப்பாக மேற்கொண்டமைக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் விபத்தில்லா பேருந்து ஓட்டுநருக்கும், பள்ளி கல்வித்துறையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பணிகளை சிறப்பாக மேற்கொண்டமைக்காவும் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ்.ராஜ்குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல. சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், ப.முருகமணி, மூவலூர் மூர்த்தி, பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், முத்துராஜா, அண்ணாதுரை ஒன்றியக் குழு தலைவர் கள் காமாட்சிமூர்த்தி, மகேந்திரன், நந்தினிஸ்ரீதர், ஜெயபிரகாஷ், கமலஜோதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், இன்றைய சாலை பாதுகாப்பு கூட்டம் தருமபுரம் ஆதினம் காலை அறிவியல் கல்லூரியில் நடத்த இசைவு தந்த தருமபுரம் ஆதீனத்திற்கும் அதன் நிர்வாகத்திற்கும் தமிழக அரசின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 1915, 1921, 1927 ஆகிய கால கட்டங்களில் மகாத்மா காந்தியே இந்த ஊருக்கு வருகை தந்துள்ளார்கள். அவரோடு இருந்த தியாகி தில்லையாடி வள்ளியம்மை பிறந்த மண் மயிலாடுதறை மாவட்டத்தில் இருக்கிறது. பண்டைய காலங்களில் 29 நகராட்சிகள் தான் இருந்துள்ளது. இதில் மயிலாடுதுறை நகராட்சியும் இருந்துள்ளது என்பது மிகவும் பெருமைக்குரிய செய்தியாகும், 1887 ஆம் ஆண்டு சென்னை, தூத்துக்குடி இரயில்வே பாலம் அமைக்கப்பட்ட போது முக்கிய இரயில் பகுதியாக இந்த மயிலாடுதுறை விளங்கி இருக்கியது. மயிலாடுதுறை மாவட்டத்தில் நெடுஞ்சாலை துறை சார்பில் ஆய்வு மேற்கொள்ளும் போது பெருமைக்குரிய மயிலாடுதுறை மாவட்டத்தில் விபத்தில்லா மாவட்டமாகவும், விபத்தினை குறைத்திடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவும் திட்டமிடப் பட்டு அதன் படி இக் கூட்டம் நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இக் கூட்டமானது நடத்தப்படுகிறது. விபத்தை குறைக்க 5 துறைகளை நாங்கள் ஈடுபடுத்த உள்ளோம். நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத்துறை, காவல் துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை இந்த 5 துறைகள் தான் விபத்தில்லா நிலையை உருவாக்க கைக் கோர்த்து செயலாற்றி வருகிறோம். பொதுவாக சொன்னால் நெடுஞ்சாலை துறை தரமான சாலை அமைக்க வேண்டும்.

நடைபாதைகளை முறையாக அமைக்க வேண்டும். பாலம், சாலை பணிகள் நடைபெறும் இடங்களில் சாலை பயன்படுத்துவோருக்கு தெரியும் வண்ணம் பேரிகார்டுகளை பயன்படுத்த வேண்டும். பொதுவாக மயிலாடுதுறை மாவட்டம் கிராம சாலைகள் அதிகமாக இருக்கிற மாவட்டமாக உள்ளது. இம்மாவட்டம் இங்கு தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலையும் செல்கிறது. கிராம சாலைகளை முறையாக அமைத்து வேகத்தடை அமைக்காவிடில் கிராம சாலையிலிருந்து தேசிய நெடுஞ்சாலைக்கு வாகனத்தில் வருபவர்கள் சாலை விபத்தில் சிக்குகிறார்கள்.

காவல் துறையினர் தலைக்கவசம் அணியாதவர்களை கண்காணித்து உரிய அபராதம் விதிக்க வேண்டும். கல்வித்துறை பொருத்தமட்டில் பள்ளிகளில் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் சாலை விபத்துகளை குறைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மாநில நெடுஞ்சாலை 160 கி.மீ., மாவட்ட முக்கிய சாலை 168 கி.மீ. இதர சாலைகள் 421 கி.மீ, தேசிய நெடுஞ்சாலை 46 கி.மீ. என மொத்தம் 855 கி.மீ. சாலைகள் தமிழ்நாடு அரசால் நேரடியாக பராமரிக்கப்படுகிறது. அந்த வகையில் 2021-2022 ஆம் நிதியாண்டில் 148 குழாய் பாலங்களை ஆர்ச் கல்வெட்டாக மாற்ற முடிவு செய்யப்பட்டு இதற்காக ரூ.27 கோடி பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் 76 கி.மீ. 51 சாலை பணிகளை ரூ. 63 கோடி மதிப்பீட்டில் 41 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 44 கி.மீ. நீளமுள்ள 33 சாலைகளை ரூ. 64 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இதில் 10 பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் ஒரு மாத காலத்தில் முடிவடைந்து விடும். 2023-2024 ஆம் ஆண்டில் 51 கி.மீ. சாலைகள் ரூ.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. அந்த பணிகள் ஒப்பந்தம்கோரும் பணிகள் நடைபெற்றுள்ளது. ஒரு மாத காலத்தில் பணிகள் தொடங்கப்படும். கிராம சாலைகள் தரமான சாலைகளாக அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ. 42 கோடி மதிப்பீட்டில் 31 கி.மீ. சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. அந்த பணிகள் தற்போது நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் கிராமச் சாலை பணிகள் எடுக்க முன்மொழிவுகள் அனுப்பும் பணிகள் நடைபெற்று வருகிறது. 2021-2022ல் தரை பாலங்களை மேம்பாலமாக மாற்றும் பணிகள் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுள்ளது. இரயில்வே மேம்பாலம் அமைக்க மாவட்டத்தில் கல்லணை காவேரிபூம்பட்டினம், பட்டவர்த்தி ரயில்வே மேம்பாலம் பணிக்கு ரூ. 18 கோடி ஒதுக்கப்பட்டு நிலம் எடுப்பு பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கிறது.

ஆகவே இந்த மாவட்டத்தின் வளர்ச்சி கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி நிதிகளை ஒதுக்கி நெடுஞ்சாலை துறையில் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகிறது. மயிலாடுதுறை மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்ட பின்பு புதியதாக மாவட்ட ஆட்சியரகத்திற்கு ரூ. 144 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சியரக அலுவலக கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. பணிகள் முழுவதும் முடிவுற்ற பின் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இசைவு பெற்று மாவட்ட ஆட்சியரக அலுவலகம் திறக்கப்பட உள்ளது. புதிய மாவட்ட ஆட்சியரகம் திறந்தவுடன் இந்த மாவட்டத்தின் வளர்ச்சி மிகவும் சிறப்பாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

முன்னதாக மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் காலகஸ்தினாதபுரம் கிராமத்தில் மரம் நடும் திட்டத்தை அமைச்சர் எ.வ.வேலு மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார்.




